DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.60 /2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 4 | Caste | : | |
| Name | : | வெங்கடேஷ்வரன் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 26th day of September 2022.
26.09.2022.

முதல் விசாரணை:-

1. நான் 2015-ம் ஆண்டு மண்டபம் வனத்துறையில் வேட்டை தடுப்பு காவலராக பணிபுரிந்து வந்தேன். தற்போது சுயதொழில் செய்து வருகிறேன். கடந்த 09.06.2015 மாலை 04.30 மணியளவில் மண்டபம் பனைக்காட்டு பகுதியில் மண்டபம் வனசரகர் கலசலிங்கம் அவர்கள் தலைமையில், கார்டு வடமலையான், கண்ணபிரான், மலைராஜ் வனசரகரின் தகவலின் அடிப்படையில் மேற்கண்ட பகுதியில் வேட்டை தடுப்பு காவல் பணியில் ஈடுபடும் போது 1. அல்லாபிச்சை 2. முகமது ரமலான் கனி, 3. சீனி யாசித், மூவரும் மாலை 04.30 மணியளவில் அரசால் தடை செய்யப்பட்ட கடல் அட்டை சுமார் 280 கிலோ பாலிதீன் பைகளில் கடத்துவதற்காக வைத்துக்கொண்டிருந்தார்கள்.

2. மேற்படி நபர்களை நாங்கள் பிடிக்க செல்லும் போது செய்யது அல்லாபிச்சை என்பவர் எங்களிடமிருந்து தப்பி சென்றுவிட்டார். முகமது ரமலான் கனி, சீனி யாசித் ஆகியோர்கள் மற்றும் கடல் அட்டைகளையும் கைப்பற்றி வனசரக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. வனசரகர் தலைமையில் விசாரணை நடத்தி உயர் அதிகாரி வர தாமதம் ஆனதால் அவர்களை அலுவலகத்தில் தங்க வைக்கப்பட்டது. மறுநாள் அதிகாலை வடமலையான் பாதுகாப்பில் இருந்து காலைகடன் செல்வதாக கூறிவிட்டு இருவரும் தப்பி சென்றனர்.

3.மேற்படி தடை செய்யப்பட்ட பொருட்களை நீதிமன்றத்தின் முன் அதிகாரிகள் ஆஜர் படுத்தி அரசனி நெறிகாட்டுதல் படி அழிக்கப்பட்டது.

**குற்ற சாட்டு வனைந்த பின்பு குறுக்கு விசாரணை செய்வதாக சொல்லப்பட்டது.**